# இரண்டாம் பருவத் தேர்வு - 2025

வகுப்பு : 7
காலம் : 2.00 மணி

## தமிழ்

பதிவு எண் : 7334.

மொத்த மதிப்பெண்கள் : 60

**குறிப்புகள் :**

❖ மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப் பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
❖ தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4x1=4

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் ..................
அ) வீடு ஆ) கல்வி இ) பொருள் ஈ) அணிகலன்
2. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ..................
அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
3. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............
அ) செப்பு+ஈடு ஆ) செப்பு+ஒடு இ) செப்பு+ஏடு ஈ) செப்பு+யேடு
4. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ..................
அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2x1=2

5. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ..................
6. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ..................

**III. பொருத்துக.** 4x1=4

7. உயிர்க்குக் கண்கள் – பெற்றம்
8. ஒட்டம் – சோறு
9. இயற்சொல் – எண்ணும் எழுத்தும்
10. திசைச்சொல் – விகுதி பெற்ற தொழிற்பெயர்

**IV. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

11. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார் ?
12. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர் ?
13. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும் ?
14. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
15. இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்கியது ?
16. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
17. மலர்கள் எப்போது தரையில் நழுவும் ?

**V. கீழ்க்காணும் வினாக்களுள் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x4=12

18. கல்விச்செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
19. மக்கள் விலங்குகளைப் போல வாழக் காரணம் என்ன ?
20. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார் ?
21. கேலிச்சித்திரம் என்றால் என்ன ?
22. எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன ?



TNPSC JOB | www.tnpscjob.com

**VI. அடிபிறழாமல் எழுதுக.** **4+2=6**

23. "வைப்புழி ..........." எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதுக.

24. "இடும்பைக்கு ..................." எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

25. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.

அ) ...................... சுடும்.

ஆ) ........................ பறக்கும்.

26. பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.

அ) பா ...................... .

ஆ) மை .................... .

27. பின்வரும் தொடர்களில் பொருத்தமான இடங்களில் 'ஆல்' என்னும் உருபைச் சேர்த்து எழுதுக.

அ) கல்லணை கரிகாலன் கட்டப்பட்டது.

ஆ) அவர் களிமண் பானை வனைந்தார்.

28. **கலைச்சொல் எழுதுக.**

அ) Brush - ஆ) Discipline -

29. **இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.**

அ) செடி பாய்ந்த நீர்.

ஆ) மாடு புல் கொடுத்தார்.

30. **கட்டங்களை நிரப்புக.**

| வேர்ச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| சிரி | | | |
| நட | | | |

31. **உன் பொறுப்புகள் எவையேனும் இரண்டினை எழுதுக.**

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2x6=12**

32. அ) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், வள்ளுவர் கோட்டம் / திருவள்ளுவர் சிலை போன்றவற்றைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள் ?

**(அல்லது)**

ஆ) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

33. அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை– அமைவிடம் – பெயர்க்காரணம்–தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி பொது நூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.



TNPSC JOB | www.tnpscjob.com